பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 03 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி
(Tune)

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 18 ஆயிரத்து 640 கோடி ரூபாயை இன்று விடுவிக்கவுள்ளார்.
2. ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை ஒரு கோடியே 12 லட்சம் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியாகம் செய்யபட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.
3. அமெரிக்கா 17 கோடியே 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இருப்புகளை உலக சந்தையில் விடுவித்துள்ளதாக அந்நாட்டு அமைச்சர் திரு. **Chris Wright** தெரிவித்துள்ளார்.
4. பெருவில் கனமழையால் பாதிக்கப்பட்ட 283 மாவட்டங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
5. உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்று அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திரமோடி அசாம் மாநிலம், குவஹாத்தியில் இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 22-வது தவணைத் தொகையை விடுவிக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் நாடு முழுவதிலும் உள்ள 9 கோடியே 32 லட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 18 ஆயிரத்து 640 கோடி ரூபாய் செலுத்தவுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதில் மத்திய அரசு கவனத்துடன் செயல்பட்டு வருவதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் தெரிவித்துள்ள பதிலில் இதனை அவர் கூறியுள்ளார். பிரதமரின் **Sambada** திட்டத்தின் கீழ் உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான மானியம் வழங்கப்பட்டுவருவதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் கடந்தாண்டு டிசம்பர் மாதம் வரை **485** கோடி ரூபாய் மதிப்பிலான **104** உணவு பதப்படுத்துதல் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பயன்பெறுவதற்கு ஏதுவாக இந்த திட்டங்கள் செயலப்டுத்தப்பட்டு வருவதாகவும், இந்தியாவில் தயாரிக்கபடும் உணவுப் பொருட்கள் உலகத்தரத்துக்கு இணையாக இருக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>>

மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை ஒரு கோடியே **12** லட்சத்து **22** ஆயிரத்து **200** குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனை தெரிவித்த அவர், நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீரின் தரம், குடிநீர் ஆதாரம் உள்ளிட்டவை குறித்து அவ்வப்போது மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருவாதக தெரிவித்துள்ளார்.

**2019**-ம் ஆண்டில் **21** லட்சம் குடியிருப்புகளுக்கு மட்டுமே குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டதாகவும், தற்போது **89** சதவீதம் குடியிருப்புகளுக்கு இந்த பயன் கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் 113 இடங்களில் குடிநீர் தர ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சென்ற ஆண்டு மட்டும் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட குடிநீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<◇>>>>>>

தமிழகத்தின் குலசேகரப்பட்டினத்தில் சிறிய வகை ராக்கெட்டுகளை செலுத்துவதற்கான முதல் ஏவுதளம் 986 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் நிலையில் இரண்டாவது ஏவுதளமும் அடுத்த நிதியாண்டிற்குள் அமைக்கப்படும் என்று விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்கான பணிகள் விரைவுப்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கான திட்டம் இஸ்ரோவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**In-Space** நிறுவனத்தின் மூலம் மாணவர்கள் வடிவமைத்த 17 செயற்கை கோள்கள் வெற்றிரகமாக விண்ணில் செலுத்தப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இஸ்ரோவின் மூலம் நாட்டில் ஆறு இடங்களில் விண்வெளி தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<◇>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமயில் நாடு வளர்ச்சி அடைந்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் சாமி தரிசனம் செய்த பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்காகவும் நாட்டு மக்களின் நலனுக்காகவும் வேண்டிக் கொண்டதாக கூறினார்.

<<<<<<>>>>>>>

சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறுகளை உடனடியாக சரிசெய்ய மகாராஷ்டிர அரசு உத்தரவிட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செயலிகளும், தொலைபேசி எண்களும் தடைபட்டதாக வந்த புகார்களை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான புகார்களுக்கு தீர்வு காண மாநில, மாவட்ட, ஊராட்சி அளவில் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மகாராஷ்டிர அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி **Chile**-யின் புதிய அதிபராக பொறுப்பேற்ற திரு. **Jose Antonio** வுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், அவருடன் இணைந்து செயல்பட்டு இரு நாட்டு உறவுகளை மேம்படுத்த ஆவலுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

வர்த்தம், தொழில் நுட்பம்,எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவும், சிலியும் ஒருங்கிணைந்து செயல்பட உறுதியுடன் உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலையில் சர்வதேச ரயில் பெட்டி கண்காட்சி தொடங்கியுள்ளது.

நாளை வரை நடைபெறும் இந்த கண்காட்சியில் இந்தியா உள்பட எட்டு நாடுகளை சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ளன.

இந்த கண்காட்சி முதல் முறையாக தென் இந்தியாவின் சென்னையில் நடைபெறுவது சிறப்பு மிக்கதாகும் என்று பார்வையாளர் ஒருவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போதைப்பொருள் தடுப்பு பிரிவின் தலைமை இயக்குனர் திரு. **Anurag Garg** தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரியாவின் வியன்னாவில் ஐ.நாவின் போதைப்பொருள் தடுப்பு ஆணையக் கூட்டத்தின் ஒருபகுதியாக அமெரிக்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு இயக்குனர் **Sara Carter**-உடன் ஆலோசனை மேற்கொண்டபின், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இணைந்து போதைப்பொருள் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த இது தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வரும் ஏப்ரல் மாதத்தில் இந்தியா- அமெரிக்கா போதைப்பொருள் தடுப்பு ஆலோசனைக்கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

அமெரிக்கா **17** கோடியே **20** லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இருப்புகளை உலக சந்தையில் விடுவித்துள்ளதாக அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் **Chris Wright** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வரும் நிலையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் இணைந்து 30 நாடுகள் 40 கோடி பீப்பாய் எண்ணெயை சர்வதேச சந்தையில் விடுவித்து எண்ணெய் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு  தீர்வு காண முடிவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்கா 41 கோடியே 50 லட்சம் பீப்பாய் எண்ணெய் இருப்பில் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>>

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில் ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான தடையை தளர்த்த அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த மாதம் ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கும், பெட்ரோலிய பொருட்கள் இறக்குமதிக்கும் அனுமதி அளிக்கப்போவதாக கூறப்பட்டுள்ளது.

**Hormuz** நீரிணை வழியாக எண்ணெய் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த வாரம் ரஷியா மீதான இறக்குமதி

தடையை தளர்த்த நடவடிக்கை எடுக்கும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>>>

பெருவில் கனமழையால் பாதிக்கப்பட்ட **283** மாவட்டங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பெருவின் **Lima, Amazonas, Cuseo** உள்ளிட்ட **20** பகுதிகளில் அடுத்த **2** மாதங்களுக்கு அவசர நிலை அமலில் இருக்கும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்த காலங்களில் மாகாண மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தேசிய சிவில் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து பேரிடர் மீட்பு பணிகளில் ஈடுபடவுள்ளன.

**El Nino** பருவநிலை மாறுபாடு காரணமாக பெருவில் கனமழை பெய்து வருவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>>

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்று போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இரவு மணி **7-30**க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>>**